வகுப்பு: பத்து
மாதம்: மார்ச்

பொன்வித்யாஷ்ரம் குழுமப்பள்ளிகள்
தமிழ் இரண்டாம் மொழி
பாடக் குறிப்பேடு (2026 - 2027)

## இயல் - 1

## செய்யுள் பகுதி

### 1. அன்னை மொழியே

1. பெருஞ்சித்திரனார் - ஆசிரியர் குறிப்பு வரைக.

ஆசிரியர் : பெருஞ்சித்திரனார்
இயற்பெயர் : துரைமாணிக்கம்
பெற்றோர் : துரைசாமி, குஞ்சம்மாள்
காலம் : 10.3.1933 - 11.6.1995
பிறந்த ஊர் : சேலம் மாவட்டம்
இயற்றிய நூல்கள் :- உலகியல் நூறு, பாவியக் கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப் பறவைகள்.
எழுதிய உரைநூல் :- திருக்குறள் மெய்ப்பொருளுரை
நடத்திய இதழ்கள் :- தென்மொழி, தமிழ்ச்சிட்டு,
சிறப்பு :- பாரதிதாசனின் தலை மாணாக்கர், இவரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.
பாடப்பகுதி :- கனிச்சாறு.

2. பாவலரேறு பெருஞ்சித்திரனார் தமிழை வாழ்த்துவதற்கான காரணத்தைக் கூறுக.

★ அன்னை மொழியே அழகு நிறைந்த செழுந்தமிழே!
★ பழமைக்கும் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே!
★ கடல் கொண்ட குமரிக்கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசே!
★ பாண்டிய மன்னனின் மகளே!
★ திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவளே!
★ பத்துப்பாட்டே, எட்டுத்தொகையே! பதினெண் கீழ்க்கணக்கே!
★ நிலைத்த சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே!
பொங்கியெழும் நினைவுகளால் தலை பணிந்து வாழ்த்துகின்றோம் என்கிறார்.

3. தமிழ் மொழியின் பெருமைகளைப் பெருஞ்சித்திரனார் எவ்வாறு கூறுகிறார்?

★ செழுமை மிக்க தமிழே! எமக்குயிரே!

★ சொல்லுதற்கரிய நின் பெருமைதனை என்னுடைய தமிழ் நாக்கு எவ்வாறு விரித்துரைக்கும்?

★ பழம் பெருமையும் தனக்கெனத் தனிச் சிறப்பும் இலக்கிய வளமும் கொண்ட தமிழே!

★ வியக்கத்தக்க உன்னுடைய நீண்ட நிலைத்த தன்மையும் வேற்று மொழியார் உன்னைப் பற்றி உரைத்த புகழுரையும் எமக்குள் பற்றுணர்வை எழுப்புகின்றன.

★ எம் தனித்தமிழே! வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்து சிறகசைத்துப் பாடுவது போன்று நாங்கள் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல்மூள, உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம்.

## பாவாணர் பார்வையில் தமிழ்ச்சொல் வளம்
## உரைநடை

1. தாவரத்தின் அடி வகைகள், கிளை பிரிவுகள் பற்றி எழுதுக.

தாள் : நெல், கேழ்வரகு
தண்டு: கீரை, வாழை
கோல்: நெட்டி, மிளகாய்ச்செடி
தட்டை: கம்பு, சோளம்
கழி: கரும்பின் அடி
கழை: மூங்கிலின் அடி
அடி: புளி, வேம்பு

கிளை பிரிவுகள்:-

கவை: அடிமரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை
கொப்பு: கவையின் பிரிவு
கிளை: கொம்பின் பிரிவு
சினை: கிளையின் பிரிவு
போத்து: சினையின் பிரிவு

குச்சு : போத்தின் பிரிவு
இணுக்கு : குச்சியின் பிரிவு.

2. தாவரத்தின் இலை வகைகள், குலை வகைகள் பற்றி எழுதுக.

இலை : புளி, வேம்பு [இலை வகைகள்]
தாள் : நெல், புல்
தோகை : சோளம், கரும்பு
ஓலை : தென்னை, பனை
சண்டு : காய்ந்த தாளும், காய்ந்த தோகையும்
சருகு : காய்ந்த இலை.

குலை வகைகள்:-
கொத்து : அவரை, துவரை
குலை : கொடி முந்திரி
தாறு : வாழைக்குலை
கதிர் : கேழ்வரகு, சோளம்
சீப்பு : வாழைத்தாற்றின் பகுதி.

3. தாவரங்களின் இளம்பயிர் வகைகள், பழத்தோலின் பெயர் வகை பற்றி எழுதுக.
4. தானியங்களுக்கு வழங்கும் வேறு வேறு பெயர்கள் குறித்து எழுதுக.
5. தமிழ்நாடு எத்துணைப் பொருள்வளமுடையது என்பதையும் நாட்டின் வளத்திற்கேற்றபடியே மக்களின் அறிவொழுக்கங்களும் மேம்படும் என்பதையும் விளக்குக.

புத்தகத்தில் குறித்து படிக்கவும்.

Scanned with OKEN Scanner

## காலக்கணிதம்

1. 'காலத்தைக் கணிப்பவன் கவிஞன்' என்று காலக்கணிதம் வழியே கண்ணதாசன் கூறுவன யாவை?

காலத்தைக் கணிப்பவன் கவிஞன்:

* கவிஞன் என்பவன் காலத்தைக் கணிப்பவன்.
* கருப்படு பொருளை உருப்பட வைப்பவன்
* புவியில் அவன் புகழ் பெற்ற தெய்வம்
* பொன்னைவிட விலை உயர்ந்தது அவனது கவிதை.
* சரி என்றால் அதைச் சொல்வதும் தவறாயின் அதை எதிர்ப்பதும் என் தொழில்.
* ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய மூன்று செயல்களாலும் கடவுளுக்கு இணையானவன் நான்.
* செல்வந்தர் கையில் சிக்க மாட்டேன், பதவி வாளுக்கும் பயப்பட மாட்டேன் என்று கண்ணதாசன் கூறுகிறார்.

2. கண்ணதாசன் தான் செய்ய இருப்பதாகக் கூறும் செயல்கள் யாவை?

* எனக்கு விருப்பம் தருவதைப் பற்றிக் கொள்வேன். என்னிடம் இருந்தால் பிறர் உண்ணத் தருவேன்.
* வண்டு பறந்து மலர்களில் உள்ள தேனைப் பருகுவது போல நானும் நல்ல கருத்துகளைக் கொணர்ந்து மக்களுக்குத் தருவேன்.
* கம்பன், பாரதி, பாரதிதாசன் சொல்லாத சிலவற்றைச் சொல்ல முனைவேன்.
* என்னைப் புகழ்ந்தால் என் உடல் சிலிர்க்காது. இகழ்ந்தால் என் மனம் இறந்து விடாது.
* நான் தரும் வளம் மிகுந்த கவிதைகளை என் வாக்குமூலங்கள்.

3. மாற்றம் குறித்துக் கண்ணதாசன் கூறுவனவற்றை எழுதுக.

* மாற்றம் எனது மானிடத் தத்துவம் என்று பாடிய கண்ணதாசன் தனது வாழ்வில் திரைப்படம், அரசியல், ஆன்மீகம் அனைத்திலும் மாற்றங்கள் கண்டவர். எனவே 'மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்' என்றார்.
* நன்மை, தீமை அறிந்தே என் பாதை செல்லும்.

Scanned with OKEN Scanner

* நாட்டின் தலைவர் மாறலாம்; ஆட்சி அமைப்பும் மாறலாம். ஆனால் மெய்யியல் மட்டும் மாறாத அட்சய பாத்திரமாக இருக்கும்.
* ஏற்றுக்கொள்வோர் ஏற்றுக்கொள்க. குறை கூறுவோர் குறை கூறுக.
* நானே தொடக்கமும் முடிவும் ஆனவன். நான் உரைப்பது தான் நாட்டின் சட்டம் என்று கண்ணதாசன் மாற்றம் குறித்துக் கூறியுள்ளார்.

4. கண்ணதாசன் - ஆசிரியர் குறிப்பு வரைக.

| | |
|---|---|
| பெயர் | : கண்ணதாசன் |
| இயற்பெயர் | : முத்தையா |
| புனைப்பெயர் | : துணங்காமுடி, ஆரோக்கியசாமி, காரை முத்துப்புலவர் |
| பிறப்பு, இறப்பு | : 24-06-1927 - 17-10-1981 |
| ஊர் | : சிறுகூடல்பட்டி - சிவகங்கை மாவட்டம் |
| பெற்றோர் | : சாத்தப்பன் - விசாலாட்சி |
| எழுதிய நூல்கள் | : அர்த்தமுள்ள இந்துமதம், இயேசு காவியம், சேரமான் காதலி சாகித்ய அகாதெமி விருது பெற்ற புதினம். |
| சிறப்பு | : தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞர், பல பாடல்களை எழுதியவர் |

## இலக்கணம் - சொல்

I நிரப்புக:-

1. ஓரெழுத்து தனித்தோ, பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள்தரும் வகையில் அமைவது சொல் ஆகும்.
2. இரு திணை, ஐந்துபால், மூவகை இடம், உலக வழக்கு, செய்யுள் வழக்கு வெளிப்படை மற்றும் குறிப்பு ஆகியவற்றை உணர்த்துவது சொல்.
3. தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மொழி மூன்று வகைப்படும்.

PAGE No.
DATE / /

4. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருமானால் அது தனிமொழி எனப்படும்.
5. தனிமொழி இரண்டு வகைப்படும். அவை பகுபதம், பகாப்பதம்.
6. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது தொடர்மொழி ஆகும்.
7. ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது பொதுமொழி எனப்படும்.
8. ஒரு வினை அல்லது செயலைக் குறிக்கும் பெயரானது தொழிற்பெயர் எனப்படும்.
9. எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் குறிப்பாகவோ, வெளிப்படையாகவோ உணர்த்தாமல் வருவது தொழிற்பெயர்.
10. வினை பெயர்த் தன்மையாகி வினையையே உணர்த்தி நிற்பது தொழிற்பெயராகும்.
11. தொழிற்பெயர் காலம் காட்டாது.
12. தொழிற்பெயர் படர்க்கை இடத்தில் மட்டும் வரும்.
13. வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர் விகுதி பெற்ற தொழிற்பெயராகும்.
14. ஒரே வினையடி பல விகுதிகளையும் ஏற்கும்.
15. எதிர்மறை பொருளில் வருவது எதிர்மறைத் தொழில் பெயராகும்.
16. விகுதி பெறாமல் வினைப்பகுதியே தொழிற்பெயராதல் முதனிலை தொழில்பெயராகும்.
17. விகுதி பெறாமல் வினைப் பகுதியே தொழிற்பெயராதல் முதனிலை தொழிற்பெயராகும்.
18. ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபை ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைத் கொண்டு முடிவது வினையாலணையும்பெயர் எனப்படும்.
19. தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் மூன்று காலங்களிலும் வருவது வினையாலணையும் பெயர் எனப்படும்.
20. தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது வினையாலணையும் பெயர் ஆகும்.

Scanned with OKEN Scanner

21. வினையாலணையும் பெயர் காலம் காட்டும்.
22. மூவிடத்திற்கும் உரியது வினையாலணையும் பெயர்.

II சான்று தருக:-
1. தனிமொழி - கண்ணன்
2. தொடர்மொழி - கண்ணன் வந்தான்
3. பொதுமொழி - வேங்கை
4. விகுதி பெற்ற தொழிற்பெயர் - ஈதல்
5. எதிர்மறைத் தொழிற்பெயர் - நடவாமை
6. முதனிலைத் தொழிற்பெயர் - தட்டு
7. முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் - சூடு
8. வினையாலணையும் பெயர் - வந்தவர்
9. தொழிற்பெயர் - காணுதல்

III கூறியவாறு செய்க:-
1. மணி (தொடர்மொழியாக்குக) மணி வந்தான்.
2. எட்டு (தொடர்மொழியாக்குக) - என் - து
3. வாழ் (விகுதிபெற்ற தொழிற்பெயராக்குக) - வாழ்க்கை
4. ஆளன் (வினையடி கண்டறிக) - ஆள்
5. நடத்தல் (விகுதி கண்டறிக) - தல்
6. கொல் (எதிர்மறைத் தொழிற்பெயராக்குக) - கொல்லாமை
7. சுடு (முதல்நிலைதிரிந்த தொழிற்பெயராக்குக) - சூடு
8. வந்தவர் அவர்தான் (வினையாலணையும் பெயரைக் கண்டறிக) - வந்தவர்
9. நடித்தவன் (எதிர்மறை வினையாலணையும் பெயராக்குக) நடிக்காதவன்.
10. அறிந்தது (தொழில் பெயராக்குக) - அறிதல்.

மார்ச்சு மாதத்திற்கான பாடக்குறிப்பு நிறைவுற்றது.

மாதம்: ஏப்ரல்

இயல் - 2 (உரைநடை)

## கேட்கிறதா என் குரல்!

I. வினா - விடை :-

1. காற்று என்னென்ன பெயர்களில் அழைக்கப்படுகிறது?

* காற்று வீசுகின்ற திசையைக் கொண்டு தமிழர்கள் காற்றுக்கு பெயர் சூட்டியுள்ளார்.
* கிழக்கிலிருந்து வீசும் காற்று கொண்டல். கடல் பகுதிக்கு மேலுள்ள மழை மேகங்களைச் சுமந்து வருவதால் மழைக்காற்று எனப்படுகிறது.
* வடக்கிலிருந்து வீசும் காற்று வாடைக்காற்று. பனிப்பகுதியில் இருந்து வீசுவதால் மிகவும் குளிர்ச்சியான ஊதைக்காற்று எனவும் அழைக்கப்படுகிறது.
* மேற்கிலிருந்து வீசும் காற்று கோடைக்காற்று. வறண்ட நிலப்பகுதியில் இருந்து வீசுவதால் இதனை வெப்பக்காற்று என அழைக்கப்படுகிறது.
* தெற்கிலிருந்து வீசும் காற்று தென்றல் காற்று. மரம், செடி, கொடி, ஆறு, மலை, பள்ளத்தாக்கு எனப் பல தடைகளைத் தாண்டி வருவதால் வேகம் குறைந்து இதமான இயல்பு கொள்கிறது.

2. இலக்கியத்தில் வளி (காற்று) இடம் பெறும் விதத்தை எழுதுக.

* தென்றலாகிய காற்று, பலவித மலர்களின் நறுமணத்தை அள்ளி வரும் பொழுது கூடவே வண்டுகளையும் அழைத்து வருவதால் இளங்கோவடிகள் காற்றை, "வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்" என நயம்பட உரைக்கிறார்.
* பலபட்டடைச் சொக்கநாதர் புலவர் எழுதிய பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது என்னும் சிற்றிலக்கியத்தில் பெண்ணொருத்தி, "நந்தமிழும் தண்பொருநை நன்னதியும் சேர் பொருப்பிற் செந்தமிழின் பின்னுதித்த தென்றலே" - எனத் தூது செல்ல காற்றை அன்போடு அழைக்கிறாள்.
* "நதியில் விளையாடிக் கொடியில் தலைசீவி நடந்த இளந்தென்றலே" எனப் பலவாறாக இன்றளவும் இலக்கியப் படைப்புகளிலும் திரையிசைப் பாடல்களிலும் காற்று நீங்கா இடம் பிடித்திருக்கிறது.

3. மனிதனால் காற்று எவ்வாறு மாசடைகிறது?
4. காற்று மாசு அடைவதனால் ஏற்படும் விளைவுகள் யாவை?
5. நச்சுக் கலந்த காற்றினை நீக்கும் வழிமுறைகள் பற்றி எழுதுக.
6. மரம் தரும் வரம் காற்று - குறிப்பு தருக.
7. காற்று ஆற்றலாக எவ்வாறு பயன்படுகிறது என்பதை விளக்குக.

பரிபாடல் செய்யுள் பகுதி.

I. வினா-விடை:

1. புவியின் உருவாக்கம் குறித்து பரிபாடல் கூறும் கருத்துகளை விளக்குக.

* எதுவும் இல்லாத வெட்ட வெளியில் உலகத் தோற்றத்துக்குக் காரணமான கரு பேரொலியுடன் தோன்றியது.
* தோன்றிய அக்கருவானது, உருவம் இல்லாத காற்று முதலான பூதங்களின் அணுக்களுடன் வளர்கின்ற வானமே முதல் பூதத்தின் ஊழியாக இருந்தது.
* பின்பு, அணுக்களின் ஆற்றல் ஆர்ப்பரித்து பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன.
* புவியானது, நெருப்பு பந்து போல் உருவாகி ஊழிக்காலம் தொடங்கியது.
* அடுத்து, மழைபொழிந்து, பூமி குளிரும்படி ஊழிக்காலம் தொடங்கியது.
* தொடர்ந்து பெய்த மழையால் பூமி வெள்ளத்தில் மூழ்கியது.
* மீண்டும், மீண்டும் நிறை வெள்ளத்தில் பூமி மூழ்கியது.
* இறுதியாக, இந்தப் பூமியில் உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது.
* அதுமட்டுமின்றி, அச்சூழலில் உயிர்கள் தோன்றி நிலை பெறும்படியான ஊழிக்காலம் தோன்றியது.

2. பரிபாடல் பற்றி எழுதுக:

* எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
* எழுதியவர் கீரந்தையார்
* இந்நூல் "ஓங்கு பரிபாடல்" என்னும் புகழுடையது.
* இதில் 70 பாடல்கள் உள்ளன.
* நமக்குக் கிடைத்தவை 24 பாடல்களே!
* அக்கால மக்களின் வாழ்க்கை முறை, அறிவாற்றல் போன்றவற்றை இந்நூல் அறியலாம்.

Scanned with OKEN Scanner

# மேகம் (செய்யுள் பகுதி)

ii) வினா- விடை:-

1. மென்மையான மேகங்கள், துணிச்சலும் கருணையும் கொண்டு வானில் செய்யும் நிகழ்வுகளை எழுதுக.

மென்மையான மேகங்கள்,

* முதுகைக் கொடுத்து சூரியனை மறைக்கும் போது துணிச்சலானவை.
* தாகங்கள் தீர்க்கும்போது மிகவும் கருணையுள்ளவை.
* தண்ணீரும் இல்லாமல் தன்னுயிரும் போகாமல் வான் வெளியில் மிதந்து செல்லும்போது மிகவும் அற்புதமானவை.

2. ஆசிரியர் - நாகூர் ரூமி குறிப்பு வரைக.

* ஆசிரியர் - நாகூர் ரூமி
* இயற்பெயர் - முகம்மது ரஃபி
* தஞ்சை மாவட்டத்தில் பிறந்தவர்.
* இவர் எண்பதுகளில் கணையாழி இதழில் எழுதத் தொடங்கியவர்.
* கவிதை, குறுநாவல், சிறுகதை, மொழிபெயர்ப்பு எனப் பல தளங்களில் இயங்கி வருபவர்.
* சுயமுன்னேற்றம் பற்றி எழுதியும், பேசியும் வருபவர்.
* இவர், ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.
* நதியின் கால்கள், ஏழாவது சுவை, சொல்லாத சொல் ஆகிய மூன்று கவிதைத் தொகுதிகள் வெளியாகியுள்ளன.
* மொழிபெயர்ப்புக் கவிதைகள், சிறுகதைத் தொகுதிகள் ஆகியவற்றுடன் 'கப்பலுக்குப் போன மச்சான்' என்னும் நாவலையும் படைத்துள்ளார்.

3. மேகம் குறிப்பு வரைக.

* மேகம், நம் கூரையாக இருக்கின்றது.
* வானத்திற்கு அழகு செய்கிறது.
* நம்மை வெளியிலிருந்து பாதுகாக்கிறது.
* மழை தருகிறது; யாப்பையே மறந்து விடுகிறார் பாரதி.
* அழகுக் காட்சி வழங்கி வியக்க வைக்கிறது.
* அந்தி வானத்து மேகத்தை அழகுணர்ச்சியுடன் வருணிக்கிறார்.
* மேக சந்தேசம் என்று காவியமே படைத்துள்ளார் காளிதாசன்.

தொகா நிலைத் தொடர்கள்
இலக்கணம்

I சான்று தருக:-
1. இரட்டைக் கிளவி - வளவள
2. உரிச்சொல் - உறுபுகழ்
3. எழுவாய்த்தொடர் - வளவன் வந்தான்
4. வினைமுற்றுத் தொடர் - வந்தார் அமைச்சர்
5. வேற்றுமைத் தொடர் - அன்பால் கட்டினார்
6. இடைச்சொல் தொடர் - மற்றொன்று
7. வினையெச்சத் தொடர் - தேடி அலைந்தார்
8. பெயரெச்சத் தொடர் - பறந்த பறவை

II இலக்கணக் குறிப்பு தருக:-
1. கூர்மனம் - உரிச்சொல் தொடர்
2. தமிழுக்குத் தந்தான் - நான்காம் வேற்றுமைத் தொடர்
3. நண்பா கேள் - விளி வேற்றுமை
4. கேட்க வேண்டிய பாடல் - கூட்டு நிலை பெயரெச்சங்கள்
5. விழுந்த மரம் - பெயரெச்சம்
6. தீ தீ தீ - அடுக்குத் தொடர்
7. நனி தின்றான் - உரிச்சொல் தொடர்
8. ஆடி மகிழ்ந்தான் - வினையெச்சத்தொடர்

III நிரப்புக:-
1. தொகா நிலைத்தொடர் ஒன்பது வகைப்படும்.
2. முற்றுப்பெறாத வினை, வினைச்சொல்லைத் தொடர்வது வினையெச்சத்தொடர்.
3. வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது வினைமுற்றுத்தொடர்.
4. உரிச்சொல்லுடன் பெயரோ வினையோ தொடர்வது
5. முற்றுப் பெறாத வினை, பெயர்ச்சொல்லைத் தொடர்வது பெயரெச்சத் தொடராகும்.
6. விளியுடன் வினை தொடர்வது விளித்தொடர் ஆகும்.
7. ஒன்றிக்கும் மேற்பட்ட வினையெச்சங்கள் சேர்ந்து சேர்ந்து பெயரைக் கொண்டு முடிவது கூட்டுநிலை பெயரெச்சம் ஆகும்.

Scanned with OKEN Scanner

8. வினையெச்சத்தொடர் இ, உ ஆகிய ஒசையில் இருக்கும்.

IV கூறியவாறு செய்க:-

1. வருக (அடுக்குத் தொடராக்குக)
வருக! வருக

2. அகிலன் வந்தான் (விளித்தொடராக்குக)
அகிலா வா!

3. அழுத முகிலன் (நிகழ்கால பெயரெச்சமாக்குக)
அழுகின்ற முகிலன்

4. வந்து சென்றான் (பெயரெச்சத்தொடராக்குக)
வந்த பையன்.

5. காவிரி பாய்ந்தது (வினைமுற்றுத் தொடராக்குக)
பாய்ந்தது காவிரி.

6. குயில் கூவியது (எவ்வகைப் பயனிலை)
வினைப்பயனிலை.

ஏப்ரல் மாதத்திற்குரிய பாடக்குறிப்பு நிறைவுற்றது.

Scanned with OKEN Scanner